<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : C. M.P no.175/2024**

**M.C No.8/2018**

**Prosecution witness : எ.சா.1** **Date : 08.04.2026.**

| | |
|---|---|
| **Name : ராஜ்குமார்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் மேச்சேரியில் குடியிருந்து வழக்கறிஞராக உள்ளேன். சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது. முதல் விசாரணைக்காக பிரமாணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தை எனது முதல் விசாரணையின் ஓர் அங்கமாக பாவிக்கவேண்டுகிறேன்.

<u>**அவர் மூலம் கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.**</u>

1. 24.12.2023 ம் தேதியிட்ட பிறப்பு சான்றிதழ் நகல் எ.ம.**சா.ஆ.1.**
2. 24.12.2023 ம் தேதியிட்ட இனியாவின் பிறப்பு சான்றிதழ் நகல் எ ம.சா.ஆ.**2**.
3. 13.01.2026 ம் தேதிய நகை கடன் அடையாள அட்டை நகல் எ.**ம.சா.ஆ.3**.
4. தாயார் பாப்பாத்தி பெயரில் உள்ள மருத்துவ குறிப்பானை 3 எண்ணிக்கை அசல் எ. **ம.சா.ஆ.4.**

நான் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்று கோரப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**2).** எனது 2 வது மனைவி மற்றும் குழந்தைகளை பாரமரிக்க மாதம் எவ்வளவு தொகை செலவாகும் என்றால் ரு. 15,000 வரை செலவாகும். மருத்துவ செலவு

தனிபட்டதாகும். நான் மருத்துவ செலவு ரு.3000 வரை எனது தாயாருக்கு செலவு செய்கிறேன் என்பதால் எனது அண்ணனகளும் பங்குகொள்வார்கள் என்றால் எனது தாயார் என்னுடைய தான் உள்ளார். அதனால் நான்தான் செலவு செய்கிறேன். முதல் மனைவி மற்றும் நான் இருவரும் சேர்ந்து தான் பாரமரிக்க வேண்டுமென சொல்லியுள்ள நிலையில் எனது குழந்தைக்கு எவ்வளவு செலவாகும் என்றால் மாதம் ரு. 4000 வலை செலவாகும். ரு.4000 வரை செலவாகும் என்ற நிலையில் எனது குழந்தையை என் வசம் ஒப்படைத்தால் நான் பார்த்து கொள்கிறேன் என்றால் தயாராக உள்ளேன். நான் தாக்கல் பாகபிரிவினை வழக்கில் எனது மகளுக்கு வேண்டிய பாகத்தினை கொடுத்து விட சம்மதம் என்றால் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை. நான் அவ்வாறு சொல்வது ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

3). எனக்கு பரம்பரை சொத்து எவ்வளவு உள்ளது என்றால் எனக்கு தனிபட்ட சொத்து எதுவும் இல்லை. எனது தகப்பனாருக்கு தனிபட்ட சொத்து உள்ள நிலையில் அவர் இறந்த பின்னிட்டு எனக்கு எவ்வளவு பங்கு உள்ளது அதன் மதிப்பு சொல்லமுடியுமா என்றால் பாகம் பிரிக்கததால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லமுடியாது. எனக்கு தனிபட்ட முறையில் எவ்வளவு சொத்து உள்ளது என்றால் 75 செண்ட் உள்ளது. பங்காளிகளுக்கு பிரச்சனை என்பதால் என் பெயரில் எழுதபட்டது. இந்த வாசகம் கிரையபத்திரத்தில் உள்ளதா என்றால் இல்லை. நடந்தததை சொல்கிறேன். எத்தனை பெயர் எனக்கு எழுதி வைத்தார்கள் என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது.

4). நகை கடன் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் குழந்தை பிறந்நதாலும், தாயாருக்கு உடல் நிலை சரியில்லாதாலும், ஜீவனாம்ச தொகை கொடுப்பதற்கு கடன் வாங்கிய அனைத்து தேவைகளுக்காக நகை கடன் பெற்றேன். 2 அண்ணன்கள் உள்ள நிலையில் நான் மட்டும் எனது தாயருக்கு செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நகை வைத்த தேதியான 1301.2026 ம் தேதிக்கு முன்னிட்டு அனைத்து நிலுகை தொகையினை மனுதாரருக்கு கொடுக்கபட்டு முடிக்கபட்டது என்றால் ஆமாம்.

5). நான் ஜீவனாம்ச தொகை கொடுத்த பின்னிட்டு தான் நகை கடன் வைத்தாக சொல்லபட்டுள்ளது என்றால் சரிதான். வெளியே கடன் வாங்கியதால் அதனை செலுத்த முடியாத நிலையில் நகை கடன் பிறகு பெற்றேன். எனது தாயாருக்கு ஏற்பட்ட மருத்துவசெலவினத்திற்காக கொடுக்கபட்ட பில்லில் 11 என திருத்தபட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை.

6). இரண்டு மெடிக்கல் பில் சேர்ந்து எவ்வளவு தொகை செலவாகும் என்றால் ரு.1500 வரை செலவாகும். மொத்தம் ரு.4000 வரை செலவாகும். 04.02.2026 ம் தேதிய பில்லில் ரு. 200 வரை செலவாகும் என்றால் மருத்துவர் கட்டண உட்பட அனைத்து பரிசோதனைகளுக்கும் சேர்த்து சொல்கிறேன். நான் மருந்து கடையில் இருந்து பெற்ற நிலையில் மருத்துவர் வசம் பெற்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எனக்கு திப்பரத்தம்பட்டியில் சொத்து உள்ளதா என்றால் ஆமாம். அது ஓட்டு வீடாகும். மேச்சேரியில் வசதியான வீட்டில் வாழும் நிலையில் எனது மகளுக்குமொத்தம் ரு. 6000 வரைகொடுப்பது போதும் என சொல்வது ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

7). எ னது மகள் என்ன பள்ளியில் படிக்கிறாள் என்றால் மீனம்பார்க் பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கிறார். எனது மகளுக்கு வருடம் எவ்வளவு செலவாகும் என்றால் ரு.24,000 வரை செலவாகும். இதை தவிர வேறு செலவு உள்ளதா என்றால் உள்ளது. ஏற்கனவே கொடுத்து வரும் மாதந்திர தொகை போதுமானதாகும். எனது குழந்தையை பாரமரிக்க நான் தயராக உள்ளேன் என்றால் உள்ளேன். இதே தொகையினை கொடுக்கும் பட்சத்தில் நான் பாரமரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.04.08 17:39:39 +0530

Judicial Magistrate No.II,
Mettur.